உ
சிவமயம்



யாழ்ப்பாணம் கந்தர்மடம்
சண்முகம் தியாகராஜா அவர்கள்
11-04-1998 அன்று
அமரத்துவம் அடைந்ததன்

# நினைவுச் சுவடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓம் சிவ சிவ கணபதி துணை ஓம்**



கலியுகத் தெய்வமே கந்தனுக்கு மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப் பொருளோனே
எம் உள்ளத்தில் குடியிருக்கும் யானை முகத்தோனே
எம்மைக் காக்கும் ஐந்து கரத்தானே - உன்
திருவடியைப் பற்றினோம் நாம்
எமது வறுமையை நீக்கி நிம்மதியைத் தாருமையா
நோயற்ற வாழ்வை தாருமப்பா எமக்கு - அப்பப்பா
இனியொரு பிறவி வேண்டேன் அப்படி வேண்டின்
உன் திருவடியை என்றும் மறவாதிருக்க வரம் தாருமப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் பாடல்

ஓம் நமசிவாய மந்திரம், நலம் தரும் மந்திரம்
உமாபதி மந்திரம் உலகாளும் மந்திரம்
தென்மனச் சுடராகும் சிவ சிவ மந்திரம்
சிந்தையின் நிறைவாகும் நந்தியின் மந்திரம்
ஓம்நமசிவாய ஓம் நமசிவாய ஓம்நமசிவாய சிவாயநமஓம்

மயிலையில் அருள்மிகும் கபாலீஸ்வரம்
மதுரையில் விளையாடும் சுந்தரேசன்
கயிலை சிதம்பரத்தில் நடராஜன்
காசி கங்கையிலே விஸ்வநாதன்
ஓம் நமசிவாய ஓம்

கதிதரும் காஞ்சியில் ஏகாம்பரவாணன்
கடவூர் திருத்தளத்தில் அமிர்தகடேஸ்வரன்
கண்ணப்பன் கண்பார்த்த காளத்தியப்பன்
நெற்றிக்கண் கொண்ட அண்ணாமலையன் (ஓம்) (ஓ)

பால்ஊட்டும் சீர்காழியில் பிரம்மபுரிஸ்வரன்
சீர்கொண்ட ஆரூரில் தியாகராஜன்
கானத்தில் வடுவான நாதலிங்கம் (ஓம்)
கஜனமெல்லாம் வதக்கும் பூதலிங்கம்
ஆகமச் சுடராகும் ஜோதிலிங்கம்
ஓம் ஓம் ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு சண்முகம் தியாகராஜா அவர்கள்



தோற்றம்: 18.2.1933 மறைவு : 11.4.1998

## திதி வெண்பா

ஆண்டு ஈசுவர வருஷ பங்குனித்
திங்கள் இருபத்தெட்டாம் நாள்
சனிக்கிழமை தூண்டு முயர் பௌர்
ணமியாம் சொல் திதியில் - நீண்ட புகழ்
ஆர்ந்த குணசீலன் அன்புத்
தியாகராஜன் சேர்ந்த நல் சிவபதமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்திரு சண்முகம் தியாகராஜா அவர்களின் வாழ்க்கை குறிப்பு

அமரர் திரு வேலுப்பிள்ளை சண்முகம் அவர்கட்கும் அவர் பாரியார் அமரர் சிவபாக்கியம் அம்மையார் அவர்கட்கும் அவர்தம் புண்ணியத்தின் பலனாக 18-02-1933 அன்று இவ்வையகத்தில் திரு.சண்முகம் தியகராஜா அவர்கள் ஜெனனித்தார். சிறப்புள்ள குடும்பத்தில் பிறந்த இவர் தனது சிறுபிராயத்திலேயே அன்னையை இழந்து தந்தையின் பாதுகாப்பிலும் பாட்டியின் பராமரிப்பிலும் சிறிய தந்தை திரு வைத்திலிங்கம் அவர்களினதும் அவர்பாரியார் பாக்கியலட்சுமி (ராதாக்கா) அம்மையாரினதும் அன்பிலும் மிக செல்லமாகவும் சிறப்பாகவும் வளர்ந்தார். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரி யில் சிறந்த கல்வியைப் பெற்ற இவர், தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் பெற்றிருந்த சிறப்புத் தேர்ச்சியின் விளைவாக தனது இளவயதிலேயே இலங்கை நீதி நிர்வாகத் துறையின் கீழ் நீதிமன்ற மொழி பெயர்ப்பாளராக தொழில் பெற்று பல இடங்களில் கடமையாற்றினர்.

அமரர் திரு தில்லைநாதன் அவர் பாரியார் கனகம்மா அம்மையார் அவர்களின் சிரேஸ்ட புத்திரி சரஸ்வதி தேவியை தனது வாழ்க்கைத் துணைவியாக 26-10-1953 அன்று கரம் பிடித்து தனது இல்லற வாழ்வில் இரண்டறக் கலந்து அதன் பயனாக நந்தனன், வசந்தன், எனும் நாமத்தையுடைய இரண்டு ஆண் செல்வங்களையும் நந்தினி, சுகந்தினி எனும் நாமத்தை யுடைய இரண்டு பெண் செல்வங்களையும் இனிதே பெற் றெடுத்து தனது பாரியார் சரஸ்வதிதேவி அம்மையாரின் துணையுடன் தனது செல்லப் பிள்ளைகளை அன்புடனும் பாசத்துடனும் பண்புடனும் சிறப்புற வளர்த்து அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கல்வி புகட்டி இனிதே விவாகமும் செய்து வைத்தார். அதன் பயனாக ஸ்ரீகாமினி, சந்திரவதனா, ஜெகதீஸ்வரன் ரவீந்திரகுமார் எனும் நாமத்தையுடைய அன்புள்ளம் கொண்ட மருமக்களின் உறவையும் ஆதரவையும் பெற்றுக் கொண்டார். அவ்வாறாக தனது குடும்பப் பொறுப்புக்களை அன்புடனும் கண்டிப்புடனும் கடமையுணர்வு சிறிதும் தளராது நிறைவேற்றிய இவர் தன் பிள்ளைகளின் இனிய இல்லற வாழ்வின் மூலம் பிரவிந்தி, அரவிந்தி, மாதங்கி, சாய்ராம், மைத்திரேயி, காயத்திரி, யாதவன் எனும் நாமத்தையுடைய ஏழு பேரப் பிள்ளைகளையும் பெற்று இறுதிவரை தனது மனைவி பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகளின் அன்புடனும் ஆதரவுடனும் சிறப்புற வாழ்ந்து வெற்றியும் கண்டார்.

இவர் வாழ்வில் பிள்ளைபோல் பாசம் கொண்ட தம்பி Dr.மாணிக்கராஜா தங்கை லோகேஸ்வரியும் இன்பத்திலும் துன்பத்திலும் உற்ற நண்பனைப் போல் துணைநின்ற மைத்துனர் திரு மகாலிங்கம் அவர்களும் மறக்க முடியாதவர்கள். இவர்களுடன் இவர் மீது மிகுந்த பாசமும் அன்பும் கொண்ட உடன்பிறவா சகோதரர்கள் அருள்நந்தி, சிவானந்தன் காலஞ் சென்ற தயானந்தன் உடன் பிறவா சகோதரிகள் திருமதி செல்வராகேஸ்வரி பொன்னுச்சாமி, திருமதி சிவபாக்கியம் சிவன்ராசன், திருமதி சற்குணராணி சோதிநாதன், திருமதி கலாவதி தம்பையா, மைத்துனர்கள் செல்வராஜா, சுந்தரராஜா, விவேகானந்த ராஜா, கணேசராஜா, சிவிஸ் கந்தராஜா, மைத்துனிகள், திருமதி கமலாதேவி, திருலிங்கநாதன், திருமதி பராசக்தி கௌரிசங்கர், திருமதி பிரேமாவதி நவரெட்ணம் ஆகியோரது அன்பையும் மதிப்பையும் பெற்று சிறப்புற்றிருந்தார். இவ்வாறெல்லாம் தனது குடும்ப வாழ்வில் சிறப்புற்றிருந்த திரு தியாகராஜா அவர்கள் தனது கடமையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாயிருந்து தனது பணியை திறம்பட பிறர் மெச்சும்படி ஆற்றினார் என்றால் மிகையில்லை. தான் கொண்ட உறுதியில் என்றும் நம்பிக்கை இழந்ததில்லை. அவர் மனதில் சட்டம் கற்க வேண்டிய எண்ணம் ஏன் தோன்றியது என்பது பிற்காலத்தில் தான் அனைவருக்கும் புரிந்தது. இலங்கையின் அதிகாரமளிக் கப்பட்ட நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக தனது பணியைத் தொடர்ந்து கொண்டே இலங்கை சட்டக் கல்லூரியில் தனது சட்டப்படிப்பைத் தொடங்கினார். தான் எண்ணியபடியே சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று சட்டவாளராக உறுதிப் பிரமாணமும் எடுத்துக்கொண்டார். பணமே முதற்குறிக் கோளாக கொண்டிருந்காது ஏழைமக்களினதும் தொழிலாளர் களினதும் உரிமை காக்கப்பட வேண்டும் அவர்களிட்கு சரியான நீதி கிடைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக நின்றார். மற்றவர் மூக்கின் மேல் விரல்வைக்கும் அளவிற்கு செயல்பட்டும் காட்டினார். தொழி லாளர்கள் மீது அவர் கொண்டிருந்த பற்றுப் பாசமும் காரணமாக இலங்கை தொழிலாளர் நீதி மன்றுகளில் தொழிலாளர் நலனுக்காக சட்டத்தரணி யாகவும் பணியாற்றினார்.

பின்னர் சண்முகராாசன் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிய தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக வும் பணியாற்றினார். சுருக்கமாகச் சொல்லப்போனால் தன் வாழ்நாளின் பாதியை தொழிலாளர்களின் நலனைக் காப்பதற் காகவே செலவிட்டார் என்றால் மறுப்பதற்கொன்றுமில்லை. அத்துடன் நின்றுவிடாமல் தன் எண்ண ஈட்டிகளையும் செயல் திறனையும் இன்னும் விரிவடையச் செய்து தன்னை ஒரு பொது நலவாதியாக்கிக் கொண்டு ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக அரும்பாடுபட்டிருக் கின்றார். அவர் தமிழ் மக்கள் நலனில் காட்டிய ஆர்வமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிய பங்களிப்பும் சொல்லில் அடங்கிவிட முடியாதவை. எத்தனையோ இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியிலும் தன் பொதுநலப் பணியில் சற்றும் தளராமல் உறுதி யுடன் செயலாற்றினார் என்பதை இன்று நினைத்தால் கூட புல்லரிக்கின்றது. அந்தளவிற்கு தன் பொதுநலப் பணிகளைத் திறம்படச் செய்தார்.

தான் ஒரு சிறந்த எழுத்தாளன் என்பதையும் ஈழநாடு நாளேட்டின் தலைமை ஆசிரியராக இரண்டாண்டுகளாக திறம்பட கடமையாற்றியபோது நிருபித்துக்காட்டியும் விட்டார். எத்தனையோ புனைப் பெயர்களைக் கொண்டு கட்டுரை வாயிலாகவும் செய்தி வாயிலாகவும் மக்கட்கு பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார். அவர் நாளேட்டின் மூலம் சொன்ன சீர்திருத்தக் கருத்துக்கள் இன்னும் எம் நெஞ்சில் நிழலாகின்றன. அவர் பிறந்ததன் பயன் அனைத் தையும் அடைந்துவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். இலங்கையில் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காக அவர் அரும்பாடுபட்டிருக்கின்றார். சமாதானம் நிலைத்திருக்க வேண்டும் என்பதுதான் அரவது கடைசி ஆசையும்கூட. ஆனால் சமாதானம் சங்கமிக்கும் முன்பேயே அவர் சங்கமம் ஆகிவிட்டார். இதை நினைக்கையில்தான் உள்ளம் குமுறிக் கொந்தளிக்கின்றது.

அவர் தன் தாய் மண்மீதும் தாய் மொழி மீதும் கொண்டிருந்த பற்றும் பாசமும் எந்த ஒரு அளவு கோலினாலும் மதிப்பிட முடியாது. அவர் இந்தளவு உறுதியுள்ளம் படைத்தவராக வாழ்வதற்கு அவர் மொழிமீதும், மண் மீதும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளை களைந்தெறிய வேண்டும் என்பதிலும் கொண்டி ருந்த பற்றும் பாசமும் தான் காரணமாகும். ஐயா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்த பிள்ளைகள் நால்வர்தான் ஆனால் அவருக்கு அவர் பெற்றெடுக்காத பிள்ளைகள் பல நூறுபேர் உண்டு அவர் இழப்பை அவர்கள் எப்படிதான் தாங்கிக் கொள்ளப் போகின் றார்களோ தெரிய வில்லை .நல்ல மனம் வாழ்க நாடு போற்ற வாழ்க என்பது போல் வாழந்து காட்டிவிட்டார். அவர் மறைந்து விட்டாலும் அவர் புகழ் ஈழமெங்கும் என்றும் நிறைந்து தானிருக்கும்.

ஈழத்தில் இருந்து தனக்கு ஏற்பட்ட கொடிய நோய்தீர்க்க இந்தியா வந்தார். தனதுடலை வருத்தி பலவிதமான சிகிச்சை யும் பெற்றார். ஆனால் எந்தப் பலனும் கிடைக்கவில்லை மரணத்ததைத் தவிர விதியை வென்றவர் யாரும் உண்டோ இவ்வையகத்தில் தனது விதியின்படியே 11-04-1998 அன்று தனது சொற்க லோகம் நோக்கிய பயணத்திற்காக இறைபதம் அடைந்துவிட்டார்.

**அவரது ஆத்மா சாந்தியடைய எமதுள்ளம் நிறைந்த பிரார்த்தனைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சின் நினைவலைகள்

அன்பின் சிகரமே! பகுத்தறிவுப் பகலவனே!

தொழிலாளர் தோழனே!

உம்மை இழந்து எமதுள்ளம் தவிக்குதையா

பூமித்தாய்க்கு இரக்கமே இல்லையா?

வாய்பிளந்துன்னை விழுங்கி விட்டாளே

இம்மண்ணில் நீ வாழ்ந்த அந்த வாழ்வே உமக்குப் பெருவாழ்வு

மறக்க முடியுமா? அந்த நினைவலைகளை

விண்ணில் சுடர் போல..... வேர் பிடித்த மண்போல.....

பாட்டாளி வாழ்வுக்குள் தோளோடு தோள் நின்று

நீதி கேட்டுப் போரிட்டதை மறந்திடுவாரா யாரும்?

திக்கெட்டும் பரவிக்கிடக்கின்றதையா உன் புகழ்

தனக்காகவே வாழும் இவ்வையகத்தில்

உன் பெரும்பகுதி வாழ்க்கை

தமிழினத்தின் போராட்டப் புயலுக்குள்

புதை சேற்றுக் குழிகளுக்குள்

வேலிகளை மீறிச் கிளைவிரித்த கற்பகம் நீ!

தடைகளை விலக்கிப் பூத்து வந்த தாமரை நீ!

கண்ணீர் பெருகிவரக் கவலையிலே நீந்திவந்து-மக்கள்

மனப் புண்ணுக்கு மருந்திட்ட புதிய வைத்தியன் நீ!

நம்பிக்கை என்ன நம்பிக்கை தாய் மண்மேலே

நம்பிக்கை என்ன நம்பிக்கை வாழ்க்கையிலே

செய்யும் தொழிலே தெய்வமென்று நேசித்தவரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யில்லா மனமே! பொதுவுடமை சமதர்மத்தை

காற்றுக்கும் கூடக் கவனமாய்ச் சொல்லி வந்தவரே!

கொண்ட இலட்சியத்தில் ஒன்றிப் போன இலட்சியவாதியே!

உன் இழப்பை எம்மால் ஏற்கமுடியவில்லை ஐயா

நீ இன்னும் மடியவில்லை ஐயா வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றீர்

கொண்ட இலட்சியத்தில்

பத்திரிகை ஆசிரியனாய் நீ மின்னியதை மறந்திட முடியுமா?

அறுசுவை விருந்தில் இல்லை வளர்ச்சி

ஆளும் அறிவும் வளர்வதே வளர்ச்சி

சின்ன குழந்தைகளுக்கா நாளேடு வாயிலாக சேதிகள் சொன்னாய்

ஜெகத்திற்கே அதன் மூலம் நீதி சொன்னாயே

பகுத்தறிவுக் கண்ணோட்டமும் - பழமை

இல்லாக் கருத்தோட்டமும் - புதிய

சிந்தனையும் புரட்சி மனப் போக்கும் கொண்டு

கீழ்திசையில் இருள் கிழித்துக் கிளம்பும் கதிரவன் போல....

உறுதியுடன் வாழ்ந்து காட்டினாயே உன் வாழ்வதனை

''வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா?

மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா?

கொலைவாளினை சுடடா மிகு கொடியோர் செயலறவே

குகைவாழ் ஒரு புலியே! உயர் என மேவிய தமிழா!

இலையே! உணவிலையே! கதி இலையே!

எனும் எளிமை இனிமேலிலையே! எனவே

முரசறைவாய் முரசறைவாய்!!''

என்ற பாரதிதாசனின் முழக்கம் போல்தானே

சிறப்புடன் வாழ்ந்து காட்டினீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுள் நீ கொண்டிருந்த கொள்கையுறுதியினை

எழுத்தினால் வடித்திட முடியுமோ? இல்லையே.....

எழுதிட முடியவில்லையே

கடைசிக் காலத்தில் நீ சுற்றித் திரிந்தது

காடு, மலை, மேடு, பள்ளங்களில் தானே - அவைகளும்

உன் உறுதி கண்டு அஞ்சி ஒடுங்கி நடுங்கவே - நீ

அவைகளுக்கெல்லாம் சிம்ம சொற்பனமாகத்தானே விளங்கினீர்

எப்படி வந்தது துணிச்சல் - இந்தச்

சிறிய புற்றுக்கட்டிக்கு

சுருக்கென்று குடித்துவிட்டதே உன்னுயிரை

எம்மால் மீளமுடியவில்லையே - இன்னும்

இத்திடீர் அதிர்ச்சியில் இருந்து அதனால்

புலம்புகின்றோம் புலம்புகின்றோம் நீ இம்மண்ணில் வாழ்ந்த

நாட்களை நினைத்து

மறக்க முடியவில்லை ஐயா! அது

நெஞ்சின் நினைவலைகள்.

நன்றி.

**கோ. விமலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிச் செய்த விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயலும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும் '
சொற்பதங்கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழுது தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துத் தெளிவாய்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்து திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலம் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக்
கருளிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொண்றிடமென்ன
அருடரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த தம்அளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டி
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத் தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் துதி

அருவாம் உருவாம் முருகா போற்றி
ஆறுமுகப் பெரும் பொருளே போற்றி
இறைவனுக் கரும்பொருள் இசைத்தாய் போற்றி
ஈசற்கினிய சேயே போற்றி
கந்தா கருணைக் கடலே போற்றி
காணும் பொருளில் கலந்தாய் போற்றி
சக்தியை வேலாய் கொண்டாய் போற்றி
சரவணபவ குக தலைவா போற்றி
தணிகைமலை அமுதே போற்றி
திசைமுகம் விளக்கும் செம்முகா போற்றி
பருவம் முதிராப்பண்பே போற்றி
யாவரும் விரும்பும் தலைவா போற்றி
கல்வியும் செல்வமும் கனிந்தருள் போற்றி
பல்வகை பயனும் பணிந்தருள் போற்றி
பிறவிக் கடலை தணிப்பாய் போற்றி
என்பால் அருள்புரி என்றும் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்

## (திருவாசகம்)

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயொன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தை நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்

சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை

முந்தை வினைமுழுதும் ஓய்வுரைப்பனயான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி

எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்

விளங்கொளியாய்

எண் இறந்து எல்லையிலாதானே நின் பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்

பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்

செல்லா அநின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமாள்

மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்

உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்

ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா

பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழகள் காட்டி

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே

தேசனே தேனா ரமுதே சிவபுரனே

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே

ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே

ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே

நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே

இன்பமுந் துன்பமுமில்லானே யுள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே

கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே

போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே

ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்

தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்

ஊற்றான உண்ணா ரமுதே உடையானே

வேற்று விகார விடக்குடம்பினுட்கிடப்ப

ஆற்றேன் எம்மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்

மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே

கள்ளப் புலங்குரம்பை கட்டழிக்க வல்லானே

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே யொவென்று

சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்

பல்லோரு மேத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தர் அருளிய

# கோளறு திருப்பதிகம்

வேயுறுதோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறுநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 1

என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகந்த அதனால்

ஒன்பதொடு ஒன்றொடுஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாயய் நாள்கள் அவைதாம்
அன்பொடுநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்

திருமகள் கலைய தூர்தி செய மாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறிநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 3

மதிநுதல் மங்கையோடு வட ஆலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்

கொதியுறு காலன் அங்கிநமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்

வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும்நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்

கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடுகரடி
ஆளரிநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன்மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வன் அடைவான்
ஒப்பிளமதியும் அப்பும் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்

வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
விளையான வந்துநலியா
அப்படிநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள்தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்

ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்த நலியா
ஆழ்கடல்நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடுஎருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மிசை யோனும் மாலும் மறையோடுதேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமும் மதியுநாகம் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்

புத்தரொடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகுநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞானிமுனிவன்

தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மலைஓதும் அடியார்கள் வானில் 11
அரசாள்வர் ஆணை நமதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பிள்ளை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறிய வொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே...

## திருப்புகழ்

அவசியமுன் வேண்டிப் பலகாறும்
அறிவினுணர்ந்தான்டுக் கொருநாளில்
தவசெபமுந் தீண்டிக் களிவாகிச்
சரணமதும் பூண்டற்கருள் பாவே
சவதமொடுந் தாண்டித் தகரூர்வாய்
சடுசமயங் காண்டற் கரியானே
சிவகுமரன் மீண்டிற் பெயரானே
திருமுருகன் பூண்டிப் பெருமானே.

## திருவாசகம்

பால் நினைந்து ஊட்டும் தாயினும்
சாலப் பரிந்து நீ பாவி யேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திமிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா பஞ்சகம்

("மஹிஷாஸுர மர்த்தினி" என்ற மெட்டு)

தேவியே! துர்க்கையே! மாயவன் வடிவினில்
மதுகபி டபர்தமைத் தேய்த்தவளே!
மேவிய வரபல மகிடனை வதைத்தபின்
விண்ணவர் துதித்திடும் பராசக்தீ!

பாவியர் தூம்ரனை, சண்டனை, முண்டனை,
ரத்தமா பீஜனைப் பலிஇட்டோய்!
மேவிய சும்பநி சும்பரை வீழ்த்தினை!
மிகுதயை, கனிவுடன் எமைக்காப்போய் 1

ஞானியர் உளத்தையும் வலிதினிற் கவர்ந்திழு
நாயகி! மகிமைநல் மாமாயை!
ஆனதொர் கடக்கரு துயரிடை எண்ணிடின்
அனைத்துயிர் பயம், துயர் களை துர்க்கை!

ஞானநல் மதியினை இன்பதில் எண்ணிடின்
நல்கியாள் மங்கல நாயகியே!
ஈனமாம் ஏழ்மையை, துன்பத்தை, பயத்தினை
துடைப்பதில் இணையிலி! எமைக்காப்பாய்! 2

நாரணி! பரசிவை! ராஜராஜேஸ்வரி!
நரஅரி வடிவினை! சண்டிகையே!
பூரணி! புராதனி! சாரதை! மலைமகள்!
புவனையே! லலிதையே! பவாநிஅம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணி! சூலினி! கபாலினி! பயிரவி!
கற்பக வல்லியே! காமாட்சி!
ஆரணி! வைஷ்ணவி! மலர்மகள்! சரஸ்வதி!
அங்கயற் கண்ணியே! எமைக்காப்பாய்! 3

சரணினர், எளியவர், துன்பினர் இவர்தமைத்
தகவுடன் காப்பதில் ஊக்கமிக்கோய்!
திரமுடன் யாவரும் நலம்பெற அருள்புரி
சிவபரை! அரி,அயன், அரன்திறலோய்!

பரவிய சக்திகள் முழுமையும் ஒன்றிய
உருவொடும் ஒளிர்ந்திடு பராசக்தி!
சுரர்களின் இடர்களை நீக்கிய சுந்தரி!
கருதியின் வடிவினை! எமைக்காப்பாய்! 4

மங்கலம் அனைத்திலும் மங்கலம் ஆயினை!
வந்தனை புரிந்தனெம் நாரணியே!
சங்கமும் ஆழியும் கரமொளிர் நாரணன்
சகோதரி உன்பதம் போற்றிநின்றோம்

பொங்குபல் பொருளினை, உடல்நலம், ஆயுளை,
புகழினைப் பொழிந்தருள்! சீர்துர்க்கை!
எங்கணும் யாவரும் இணைவுடன் நலமுடன்
வாழ்ந்திட ஈச்வரி! கண்பாராய்! 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமால் தோத்திரம்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணாஉன்
செவ்வடி செவ்விதிருக்காப்பு. 1

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடரொலி
யும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்
னியமும் பல்லாண்டே. 2

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன்
நாரணா என்னும் இத்தனை அல்லால்
புன்மையால் உன்னைப்பன்னாளும் பேசிப்
புகழ்வான் அன்றுகண்டாய் திருமாலே
உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன்
ஓவாதேநமோ நாரணா என்பன்
வன்மையாவது உன் கோயில்வாளும்
வைட்டணவன் என்னும் வண்மை கண்டாயே. 3

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்திக்குமோ
மருப்பொதிந்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி உலகழந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குஎச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடுகயலுகளப்
பூங்குவளைப்போதில் பொறிவண்டுகள் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பக்தர்கள்
நீங்காதசெல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய். 5

செடியாய வல்வினைகள் தீர்க்குந் திருமாலே
நெடியானே வேங்கடிவா நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரும்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே.

பச்சைமாமலைபோல் மேனிபவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராம நாம மந்திரம்

ஸ்ரீராம ராம ராமராம ராமராம மந்திரம்
நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து சொல்லும் வேத மந்திரம்
தசரதன் தவத்தால் வந்த ராம நாம மந்திரம்
ஜனகராஜன் மருமகனான ராம நாம மந்திரம்
நாரதர் தினம் துதிக்கும் ராம நாம மந்திரம்
நன்மையாவும் தந்து காக்கும் ராம நாம மந்திரம்
வான்மீகர் போற்றுகின்ற ராம நாம மந்திரம்
வானவரும் வாழ்த்துகின்ற ராம நாம மந்திரம்
- ஸ்ரீ ராம ராம

கம்ப நாடன் போற்றுகின்ற ராம நாம மந்திரம்
காளிதாசன் போற்றுகின்ற ராம நாம மந்திரம்
கவலையெல்லாம் தீர்த் தருளும் ராம நாம மந்திரம்
துளசிதாசர் போற்றுகின்ற ராம நாம மந்திரம்
துன்பம் எல்லாம் நீக்கிவிடும் ராம நாம மந்திரம்
உத்தமர்கள் போற்றுகின்ற ராம நாம மந்திரம்
- ஸ்ரீ ராம ராம

சொல்லச் சொல்ல இனிமை பொங்கும் ராம நாம மந்திரம்
படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் பலனளிக்கும் மந்திரம்
மழை பொழிந்து வயல் செழிக்கும் ராம நாம மந்திரம்
மருவு செந்நெல் விளைவு ஓங்கும் ராம நாம மந்திரம்
பொன்னான மக்களெல்லாம் போற்றும் ராம மந்திரம்
புவனம் யாவும் வாழ்த்துகின்ற ராம நாம மந்திரம்
வாழி வாழியென்று மக்கள் வாழ்த்துகின்ற மந்திரம்
-ஸ்ரீ ராம ராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவாயூரப்பன் ஸ்தோத்திரம்

பிச்சி மந்தாரை துளசி
தாமரைப் பூமாலை சாத்தி
அச்சுதனே உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்
கோயில் முன்னே கூடி நின்று
கோடி ஜன்ம பாபம் தீர
குருவாயூரப்பா உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்
திருமேனி தரிசனம்
நிர்மல்யமாகவே கண்டு
கிரிதரா உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்
எண்ணை ஸ்நானம் செய்து
கையில் வாழைப் பழத்துடன் நிற்கும்
நீலவண்ணா உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்
குடம் குடமாக பாலை
அபிஷேகம் செய்யும் வேளை
கோவிந்தனே உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்
கொண்டை மயில் சீவி பின்னி
மஞ்சள் பட்டு கட்டிக் கொண்டு
குழலூதும் கிருஷ்ணா உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்
தீராத வினைதீர்த்து வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரும் வரம் அள்ளித் தரும்

நாராயணா உன்னை

நமஸ்காரம் செய்கின்றோம்

துலாபாரம் செய்யும் போது

குருவாயூரப்பா உன்னை

பாத நமஸ்காரம் செய்கின்றோம்

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
    படுந்துயர் ஆயின எல்லாம்
நிலந்தரும் செய்யும் நீள்விசும்ப அருளும்
    அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
    தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
    நாராயணா என்னும் நாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவகிரக வழிபாடு

1. **சூரியன் (சிவப்பு)**

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் போற்றும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி தந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

2. **சந்திரன் (முத்து)**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சதுரா போற்றி

3. **செவ்வாய் (பவளம்)**

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன்வாழ
மங்கச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

4. **புதன் (பச்சை)**

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடிபோற்றி
பதந்தந் தருள்வாய் பண்ணொலி யானே
உதவியே அருளும் உத்தமா போற்றி

5. **குரு (புஷ்பராகம்)**

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுடன் வாழ மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ் பதிவியா ழப்பர குருநேசா
க்ரகதோ ஷமின்றிக் கடாக்ஷித் தருள்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **சுக்கிரன் (வைரம்)**

சுக்கிர மூர்த்தி சுபமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளிச்சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

7. **சனி (நீலம்)**

சங்கடம் தீர்க்கும் சனிபக வானே
மங்களம் பொங்க மனம் வைத் தருள்வாய்
சச்சரவின்றிச் சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தாதா

8. **ராகு (கோமேதகம்)**

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

9. **கேது (வைடூரியம்)**

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாகும் வம்பும் வழக்கு களின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா நன்மைக்குரிய மந்திரம்

ஓம் ஆம் ஹ்ரீம் ஹ்ரோம் ஏகி பரமேஸ்வரியே வா

## திருமண மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கமலதரணி
மஹாலஷ்மி நமஹ

## நோய் தீர

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கமலதரணி
நித்ய புஷ்டாயை நமஹ

## கல்வி

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கமலதரணி
பிங்களாயை நமஹ

## தீபம்

ஓம் பூர் புவ : தத்ச விதுர் வரேண்யம் பர்கோ
தேவஸ்ய தீமஹி தியோ யோன பிரசோதயாத்

சர்வ மங்க மாங்கல்யே
சிவே சர்வார்த்த சாதகே
சரண்டே த்ரியம்பகே தேவி
நாராயணி நமோஸ்துதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வத்தை வழங்கும் மந்திரப் பாடல்கள்

(பணம் வேண்டுமா? இந்தப் பாடலை மனமுருகிப் படியுங்கள் பணம் கிடைக்கும். இது அனுபவப்பூர்மான உண்மை)

1. வாசிதீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏசல் இல்லையே

2. இறைவன் ஆயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே

3. செய்யமேனியீர், மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே

4. நீறு பூசினீர், ஏறது ஏறினீர்
கூறு மிழலையீர், பேறும் அருளுமே

5. காமம் வேவ ஓர் தூமக் கண்ணினீர்
நாமம் மிழலையீர், சேமம் நல்குமே

6. பிணிகொள் சடையீனீர், மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர், பணிகொண்டு அருளுமே

7. மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே

8. அரக்க னெரிதர, இரக்கம் எய்தினீர்
பரக்கும் மிழலையீர், கரக்கை தவிர்மினே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அயனும் மாலுமாய், முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர், பயனும் அருளுமே

10. பறிகொடு அலையினார், அறிவது அறிகிலார்
வெறிகொள் மிழலையீர், பிறிவது அரியலே

11. காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீ மிழலைமேல், தாழும் மொழிகளே

## வாழ்த்து

வாண்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசுசெய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

★ மனிதனை உன்னதத்திற்கு அழைத்துச் செல்லும் அன்பு, இரக்கம், ஈகை, தன்னல மறுப்பு போன்ற பண்புகள் உணர்வு என்ற நிலையில் இருந்தே உதிக்க வேண்டும்.

★ ஒரு பொருள் எம்மிடம் இருக்கும் பொழுது நாம் அதன் அருமை பெருமைகளை உணர்ந்து கொள்வதில்லை அதனை இழந்த பின்பே அதன் அருமை பெருமைகளை நாம் உணர்கின்றோம் அது போன்றுதான் மனிதனின் இளமைக்காலமும் அது எவ்வளவு இனிமையானது என்பதை உணராமல் இளைஞர் கள் தங்கள் இளமையை வீணடித்துவிட்டு முதுமை தட்டிய பின்பே தமது இளமைக் காலத்தை நாம் வீணடித்து விட்டோம் என்பதை உணர்கின்றார்கள்.

★ என்னால் எப்படி வாழ முடியும் என்று எண்ணிக் கொண்டிருப் பவனை விட என்னால் இப்படியும் வாழ முடியும் என துணிவுடன் வாழ்பவனே சிறந்த வாழ்க்கை வாழ்வான்.

★ அன்பு நீங்காத உறவு ஒருவனுக்கு கிடைக்குமாயின் அது அவனுக்கு மென்மேலும் வளர்ந்து கொண்டேயிருக்கும் செல்வங்கள் பலவற்றைக் கொடுக்கும் சக்தியுடையதாக இருக்கும்.

★ ஒருவன் தனக்கு துன்பத்தைக் கொடுக்கும் பாவங்கள் எக் காலத்திலும் தன்னை வருந்தாதிருக்க வேண்டும் என விரும்பு கின்றவன் தன் கனவில் கூட பிறருக்கு எத்தீயச்செயல் களையும் செய்ய எண்ணாதிருத்தல் வேண்டும்.

★ நேரிடையாக எதிர்த்து நிற்கும் விரோதியை விட கூடவே நட்புச் செய்வது போல் பழகி துரோகம் நினைக்கும் நண்பன் மிகக் கொடியவனாவான்.

நன்றி

**கோ.விமலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் அன்புத் திருவிளக்கு சண்முகம் தியாகராஜா அவர்கள் சொர்க்க பதம் அடைந்த செய்திகேட்டு உள் நாட்டிலும் வெளியிடங்களிலும் இருந்து வந்து இறுதிக் கிரியைகளில் நேராகக் கலந்து கொண்டு பலவிதத்திலும் ஒத்தாசையாக இருந்த அனைவருக்கும், அத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எம் துக்கத்தில் பங்கு கொண்டு அனுதாபமும் ஆறுதலும் கூறி எம்மை சாந்தப்படுத்திய அனைத்துத் தரப்பினருக்கும் பின்னர் அந்தி யேட்டி, வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளையும் செவ்வனே நிறைவேற்றிட உதவியாகவும் ஒத்தாசையாகவும் இருந்த அனைத்துத்தரப்பினருக்கும், அத்துடன் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்ட எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஏனைய தரப்பினர் யாவருக்கும் எமதுள்ளம் நிறைந்த பணிவான நன்றிகள் உரித்தாகட்டும்.

குறிப்பு : எம் தந்தை சிகிச்சை பெறுவதற்காக இந்தியா வந்து சேர்வதற்கு பல விதங்களிலும் ஒத்துழைப்பு நல்கி உறுதுணையாக நின்று வழியனுப்பி வைத்த நண்பர்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் எம் இதயம் கனிந்த பணிவான நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TH OFFSET PRINTERS, CHENNAI - 1. PH : 51655

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org